**சாராம்சம்:** இனிய குழந்தைகளே, நீங்கள் உங்கள் குடும்பத்துடன் வீட்டில் வாழும்போது ஒரு தாமரை மலரைப் போல் தூய்மையாக வேண்டும். ஒரெயொரு தந்தையின் வழிகாட்டல்களைப் பின்பற்றுங்கள். அவச்சேவை எதனையும் செய்யாதீர்கள்.

**கேள்வி:** எந்தக் குழந்தைகளை மாயை மிகவும் பலமாகக் குத்துகிறாள்? அதிமேலான இலக்கு என்ன?

**பதில்:** சரீர உணர்வுடைய குழந்தைகளை மாயை மிகவும் பலமாகக் குத்துகிறாள். அவர்கள் பெயரிலும், ரூபத்திலும் சிக்கிக்கொள்கின்றனர். சரீர உணர்வு வந்ததுமே அவர்கள் அறையப்படுகின்றார்கள். இதனால் அந்தஸ்து அழிக்கப்படுகின்றது. சரீர உணர்வைத் துண்டிப்பது மிக உயர்ந்த இலக்காகும். பாபா கூறுகின்றார்: குழந்தைகளே, ஆத்ம உணர்வுடையவர் ஆகுங்கள்! தந்தை உங்கள் கீழ்ப்படிவான சேவகராகவும், அகங்காரமற்றவராகவும் இருப்பதைப்போன்று, நீங்களும் அகங்காரமற்றவர் ஆகுங்கள். அகங்காரம் சிறிதளவேனும் இருக்கக்கூடாது.

**பாடல்** அவர் எங்களிடமிருந்து பிரிக்கப்படுவதும் இல்லை, எங்கள் இதயங்களில் துன்பமும் இல்லை.

ஓம் சாந்தி. குழந்தைகளாகிய நீங்கள் பாடலைக் கேட்டீர்கள். குழந்தைகள் கூறுகின்றனர்: நாங்கள் அசரீரி உலகில் இருந்தபோது பாபாவிற்குச் சொந்தமாக இருந்தோம், பாபாவும் எங்களுக்குச் சொந்தமாக இருந்தார். குழந்தைகளாகிய நீங்கள் மிகத் தெளிவான ஞானத்தைப் பெற்றுள்ளீர்கள். நீங்கள் சக்கரத்தைச் சுற்றி வந்துள்ளீர்கள் என்பதை அறிவீர்கள். நாங்கள் இப்பொழுது மீண்டும் ஒரு முறை அவருக்குச் சொந்தமாகியுள்ளோம். அவர் எங்களுக்கு இராஜ யோகம் கற்பித்து, எங்களைச் சுவர்க்கத்தின் அதிபதிகளாக்குவதற்கு வந்துள்ளார். அவர் முன்னைய கல்பத்தில் செய்தது போன்றே மீண்டும் ஒரு முறை வந்துள்ளார். தந்தை கூறுகின்றார்: ஓ குழந்தைகளே! வெறுமனே அவரது குழந்தைகளாகியதால், இங்கு மதுவனத்தில் அமர்ந்திருக்காதீர்கள். வீட்டில் உங்கள் குடும்பங்களுடன் வாழும்போது, ஒரு தாமரை போன்று தூய்மையாக இருங்கள். ஒரு தாமரை மலர் தண்ணீரில் உள்ளபோதும், தண்ணீருக்கு மேலேயே நிற்கின்றது, அது தண்ணீரைத் தொடுவதில்லை. தந்தை கூறுகின்றார்: நீங்கள் வீட்டிலேயே வாழவேண்டும், ஆனால் தூய்மையாக இருங்கள். இது உங்கள் பல பிறவிகளின் இறுதிப் பிறவியாகும். நான் சகல மனிதர்களையும் தூய்மையாக்கவே வந்துள்ளேன். ஒரேயொருவரே தூய்மையாக்குபவரும், அனைவருக்கும் சற்கதி அருள்பவரும் ஆவர். அவரைத் தவிர வேறு எவராலும் அனைவரையும் தூய்மையாக்க முடியாது. நீங்கள் அரைக் கல்பமாக ஏணியில் கீழிறங்கி வருகின்றீர்கள் என்பதை அறிவீர்கள். நீங்கள் நிச்சயமாக உங்கள் 84 பிறவிகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். நீங்கள் உங்கள் 84 பிறவிகளின் சக்கரத்தைப் பூர்த்தி செய்து, முழுமையாக உக்கிய நிலையை அடையும்போதே நான் வரவேண்டியுள்ளது. அதற்கு முன்னர் வேறு எவராலும் உங்களைத் தூய்மையாக்க முடியாது. எவருக்குமே தந்தையையோ அல்லது அவரது படைப்பையோ தெரியாது. நாடகத்திற்கேற்ப, கலியுகத்தில் அனைவரும் தூய்மையற்றவர்களாகவும், தமோபிரதானாகவும் ஆகவேண்டும். தந்தை வந்து அனைவரையும் தூய்மையாக்கி அவர்களை அமைதி தாமத்திற்கு அழைத்துச் செல்கின்றார். நீங்கள் பின்னர் உங்கள் ஆஸ்தியாகிய சந்தோஷ தாமத்தைத் தந்தையிடமிருந்து பெறுகின்றீர்கள். சத்திய யுகத்தில் எவ்விதத் துன்பமும் இல்லை. நீங்கள் இப்பொழுது மரணித்து வாழ்ந்து, தந்தைக்கு உரியவர்களாக இருக்கின்றீர்கள். தந்தை கூறுகின்றார்: நீங்கள் உங்கள் குடும்பத்துடன் வீட்டில் வாழவேண்டும். பாபா எவரையும் அவர்களின் வீட்டையும், குடும்பத்தையும் விட்டு வருமாறு ஒருபோதும் கூறுவதில்லை. இல்லை, இந்த இறுதிப் பிறவியில் வீட்டில் உங்கள் குடும்பத்துடன் வாழும்போது நீங்கள் தூய்மையாக வேண்டும். உங்கள் வீட்டையும், குடும்பத்தையும் விட்டு வெளியேற வேண்டும் என பாபா எப்பொழுதாவது கூறினாரா? இல்லை. கடவுளின் சேவை செய்யவேண்டும் என்பதற்காக நீங்கள் உங்கள் வீட்டை விட்டு வெளியேறினீர்கள். சில குழந்தைகள் வீட்டில் இருந்தவாறே கடவுளின் சேவையைச் செய்கின்றனர். அவர்கள் வீட்டை விட்டு வெளியேற்றப்படவில்லை. பாபா உங்களில் எவரையும் வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறவில்லை. சேவைக்காக நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். பாபா உங்களில் எவரையும் வீட்டை விட்டு வெளியேறச் செய்யவில்லை. உங்கள் லௌகீகத் தந்தை உங்களைத் திருமணம் செய்யுமாறு கூறுகிறார். இப்பொழுது இது மரண பூமியின் இறுதிக்காலம் என்பதை நீங்கள் அறிந்திருப்பதால் நீங்கள் அவ்வாறு செய்வதில்லை. திருமணம் செய்வதென்றால் நீங்களே உங்களை அழித்துக் கொள்வதாகும். எனவே, எவ்வாறு உங்களால் தூய்மையாக முடியும்? அதற்குப் பதிலாக, நீங்கள் ஏன் பாரதத்தைச் சுவர்க்கமாக்குவதில் உங்களை ஈடுபடுத்தக்கூடாது? குழந்தைகளுக்கு இராம இராச்சியம் தேவைப்படுகின்றது. அவர்கள் கூவியழைக்கின்றனர்: ஓ தூய்மையாக்குபவரே, சீதையின் இராமரே, இராமா, வந்து பாரதத்தைச் சுவர்க்கமாக்குங்கள்! அவர்கள் இவ்வாறு கூறுகின்றனராயினும், எதையுமே புரிந்துகொள்வதில்லை. இந்நேரத்தில் கிடைக்கும் சந்தோஷம் காகத்தின் எச்சத்தைப் போன்றது எனச் சந்நியாசிகள் கூறுகின்றனர். உண்மையில் அவ்வாறேயாகும். இங்கு எவ்விதச் சந்தோஷமும் இல்லை. அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர், ஆயினும், அவர்களைச் சந்தோஷமற்றவர்கள் ஆக்குவதற்காகத் தந்தை ஓர் உலகை உருவாக்கமாட்டார் என்பது அவர்களின் புத்தியில் புகுவதில்லை. தந்தை கூறுகின்றார்: சத்திய யுகத்தில் துன்பத்தின் பெயரோ, சுவடோ இருப்பதில்லை என்பதை நீங்கள் மறந்துவிட்டீர்களா? கம்சன் போன்றவர்கள் எங்கிருந்து அங்கே வந்தார்கள்? நீங்கள் இப்பொழுது எல்லையற்ற தந்தை உங்களுக்குக் கொடுக்கின்ற வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். உங்கள் சொந்தக் கட்டளைகளைப் பின்பற்றுவதால், உங்களை நீங்களே அழித்துக் கொள்கின்றீர்கள். சிலர் இந்த ஞானத்தைச்

செவிமடுக்கும்போது வியப்படைகின்றனர். அவர்கள் இதை எடுத்துரைக்கின்றனர், பின்னர் ஓடிச் சென்று, துரோகிகள் ஆகுகின்றனர்: அவர்கள் சென்று, பெருமளவு அவச் சேவை செய்கின்றனர்! அவர்களுக்கு என்ன நடக்கும்? அவர்களின் வாழ்க்கை வைரம் போன்று பெறுமதி வாய்ந்ததாக ஆக்குவதற்குப் பதிலாக அவர்கள் ஒரு சிப்பியைப் போலாகுகின்றனர். இறுதியில், நீங்கள் செய்த அனைத்தினதும் காட்சிகளைப் பெறுவீர்கள். இத்தகைய நடத்தையால் நீங்கள் இன்ன இன்ன அந்தஸ்தையே பெறுவீர்கள்! நீங்கள் தூய புண்ணியாத்மாக்கள் ஆகுவதால், இங்கு எந்தப் பாவத்தையும் செய்யக்கூடாது. நீங்கள் செய்யும் எந்தப் பாவத்திற்கும் நூறு மடங்கு தண்டனை கிடைக்கும். நீங்கள் சுவர்க்கத்திற்குச் சென்றாலும், மிகவும் தாழ்ந்த அந்தஸ்தையே பெறுவீர்கள். நீங்கள் இங்கு இராஜ யோகம் கற்பதற்காக வந்து, பின்னர் பிரஜைகள் ஆகுகின்றீர்கள்! நீங்கள் பெறும் அந்தஸ்தில் அதிக வேறுபாடு உள்ளது. எவராவது யக்ஞத்திற்கு எதையாவது கொடுத்துவிட்டு, அதைத் திரும்பப் பெற்றுக்கொள்வாராயின், அவர் சுடலை ஆண்டியாகவே பிறப்பார் என்பது விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. சில குழந்தைகளின் நடத்தை அவர்களின் அந்தஸ்தைக் குறைக்கும் வகையில் உள்ளது. பாபா விளங்கப்படுத்துகின்றார்: அரசன் அல்லது அரசி ஆகுவதற்குப் பதிலாக, பிரஜைகளின் மத்தியில் ஒரு தாழ்ந்த அந்தஸ்தைப் பெறக்கூடிய செயல்கள் எதனையும் செய்யாதீர்கள். யக்ஞத்திற்குத் தன்னை அர்ப்பணித்த பின்னர் அதை விட்டு ஓடுபவர் என்னவாக ஆகுவார்? தந்தை விளங்கப்படுத்தியுள்ளார்: குழந்தைகளே, பாவச் செயல்கள் எதனையும் செய்யாதீர்கள்! இல்லாவிடில், நூறு மடங்கு தண்டனை பெறப்படும். எனவே, நீங்கள் ஏன் உங்களுக்கு ஓர் இழப்பை ஏற்படுத்த வேண்டும்? வீட்டில் வாழ்ந்துகொண்டு பெருமளவு சேவை செய்பவர்கள், இங்கு வசிப்பவர்களை விடவும் மிகவும் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுகின்றார்கள். எட்டு அணாக்கள் அல்லது ஒரு ரூபாயை அனுப்புகின்ற ஏழைக் குழந்தைகள் பலர் உள்ளனர். ஆயிரக் கணக்கில் கொடுப்பவர்களை விடவும் ஏழைகளே இங்கு உயர்ந்த அந்தஸ்தைக் கோருகின்றனர். ஏழைகள் பாவச் செயல்கள் செய்யாததால் உயர்ந்த அந்தஸ்தைக் கோருகின்றனர். ஒரு பாவம் செய்யப்படும்போது நூறு மடங்கு தண்டனை சேர்க்கப்படுகின்றது. நீங்கள் தூய, புண்ணியாத்மா ஆகி அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டும். நீங்கள் துன்பம் விளைவிப்பீர்களாயின், நீதிமன்றம்(**Tribunal)** இருக்கும். நீங்கள் என்ன செய்தீர்கள், அதற்கான தண்டனை என்ன என்பது பற்றிய காட்சிகள் வழங்கப்படும். அந்தஸ்தும் அழிக்கப்படும். சில குழந்தைகள் இதைச் செவிமடுத்தாலும், அவர்கள் தொடர்ந்தும் பிழையாகவே நடந்து கொள்கின்றார்கள். தந்தை கூறுகின்றார்: எப்பொழுதும் பாலும், சீனியும் போன்று வாழுங்கள். நீங்கள் உவர் நீர் போன்று வாழ்வீர்களாயின், பெருமளவு அவச் சேவையே செய்கின்றீர்கள். நீங்கள் எவரது பெயரிலோ, அல்லது ரூபத்திலோ சிக்கிக் கொள்வீர்களாயின், அதுவும் பெரும் பாவமே ஆகும். மாயை ஓர் எலியைப் போன்றவள். இரத்தம் வருவதையேனும் நீங்கள் உணராத வகையில் அவள் ஊதிவிட்டு உங்களைக் கடிக்கின்றாள். மாயை உங்களை இரத்தம் சிந்தவும் செய்கின்றாள். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்று உணராத வகையில் அவள் உங்களை அத்தகைய செயல்களைச் செய்விக்கின்றாள். ஐந்து விகாரங்களும் உங்களை முழுமையாக ஆட்கொண்டுவிட்டன! நீங்கள் எச்சரிக்கப்படவில்லை என நீதிமன்றம்(**Tribunal)** முன்னால் கூறாமல் இருப்பதற்காக பாபா உங்களை எச்சரிக்கவே வேண்டும். கடவுளே உங்களுக்குக் கற்பிக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவரோ முற்றிலும் அகங்காரமற்றவர்! அவர் கூறுகின்றார்: நான் உங்கள் கீழ்ப்படிவான சேவகன். சில குழந்தைகள் பெருமளவு அகங்காரத்தைக் கொண்டுள்ளனர்! பாபாவிற்குச் சொந்தமாகிய பின்னரும் அவர்கள் செய்யும் செயல்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! அவர்களுடன் ஒப்பிடும்போது, வீட்டில் தங்கள் குடும்பங்களுடன் வாழ்பவர்கள், அவர்களை விடவும் மிக முன்னணியில் உள்ளனர். நீங்கள் சரீர உணர்விற்கு வந்ததுமே மாயை உங்களைப் பலமாகக் குத்துகின்றாள். சரீர உணர்வைத் துண்டிப்பது உயர்ந்த இலக்காகும். சரீர உணர்வு வந்ததுமே நீங்கள் அறையப்படுகின்றீர்கள். எனவே, உங்கள் அந்தஸ்து அழிக்கப்படக்கூடியதாக நீங்கள் ஏன் சரீர உணர்விற்கு வருகின்றீர்கள்? நீங்கள் அங்கு சென்று, நிலத்தைக் கூட்டிச் சுத்தம் செய்வதாக இருக்கக்கூடாது. எவராவது பாபாவிடம் கேட்டால், பாபாவினால் உங்களுக்குக் கூறமுடியும். நீங்கள் எவ்வளவு சேவை செய்கின்றீர்கள், எத்தனை பேருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தீர்கள் என நீங்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள முடியும். மம்மாவும், பாபாவும் அனைவருக்கும் சந்தோஷத்தையே கொடுக்கின்றனர். அவர்கள் மிகவும் சந்தோஷமடைகின்றனர்! பாபா மும்பாயில் அதிகளவில் ஞான நடனம் ஆடுவதுண்டு. அங்கே சக்கரவாகப் பறவைகள் (புராணக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அமிர்தத்தைப் பருகிய பறவைகள்) போன்ற பலர் இருந்தனர். பாபா கூறுகின்றார்: ஞானத்தைச் செவிமடுப்பதில் மிக ஆர்வமாக உள்ளவர்களின் முன்னால் நான் ஞான நடனமாடுவதால், பல நல்ல கருத்துக்கள் வெளித்தோன்றுகின்றன. இதைச் சக்கரவாகப் பறவைகள் தமக்குள்ளே எடுத்துக் கொள்கின்றன. நீங்களும் அவர்களைப் போன்று ஆகினால் மாத்திரமே உங்களாலும் பின்பற்றக் கூடியதாக இருக்கும். நீங்கள் ஸ்ரீமத்தைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் உங்கள் சொந்த வழிகாட்டல்களைப் பின்பற்றித் தந்தையை அவமதித்தால், நீங்கள் பெரும் பாதிப்பையே ஏற்படுத்துகின்றீர்கள். தந்தை இப்பொழுது உங்களை விவேகிகள் ஆக்குகிறார். பாரதம் சுவர்க்கமாக இருந்தது. எவருமே இப்பொழுது அதனை அவ்வாறு கருதுவதில்லை. பாரதம் போன்று வேறு எந்தத் தேசமும் தூய்மையாக இருந்ததில்லை. அவர்கள் இவ்வாறு கூறினாலும், பாரத மக்களாகிய தாங்களே சுவர்க்கவாசிகளாக இருந்ததைப் புரிந்துகொள்வதில்லை. அங்கு எல்லையற்ற சந்தோஷம் இருந்தது. கடவுள் எவ்வாறு வந்து, அழுக்கான தூய்மையற்ற ஆடைகளைக் கழுவுகின்றார் என குரு நானக் கடவுளின் புகழைப் பாடினார். ஒரேயொருவரே அசரீரியானவர் என்பதே அவரது புகழாகும். ''சிவலிங்கம்'' என்பதற்குப் பதிலாக அவர்கள் ''அமரத்துவ சிம்மாசனம்'' என்ற பெயரைப் பயன்படுத்தியுள்ளனர். தந்தை இப்பொழுது முழு உலகினதும் இரகசியங்களை உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். குழந்தைகளே,

ஒரு பாவத்தையேனும் செய்யாதீர்கள்! இல்லாவிடில், நூறு மடங்கு தண்டனை சேர்க்கப்படும். நீங்கள் என்னை அவமதித்தால், உங்கள் அந்தஸ்து அழிக்கப்படும். நீங்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையை வைரம் போன்று பெறுமதி வாய்ந்ததாக்குங்கள். இல்லாவிடில், அதிகளவு வருந்த நேரிடும். நீங்கள் செய்த பிழைகள் தொடர்ந்தும் உங்களை உறுத்திக் கொண்டே இருக்கும்: எனது அந்தஸ்து குறைந்ததாகும் வகையில் நான் ஒவ்வொரு கல்பத்திலும் அதே செயலைச் செய்வேனா? தந்தை கூறுகின்றார்: நீங்கள் தாயையும், தந்தையையும் பின்பற்ற விரும்பினால், நேர்மையாகச் சேவை செய்யுங்கள். மாயை ஏதோவொரு வழியால் உள்ளே நுழைந்துவிடுவாள். நிலையப் பொறுப்பாளர்கள் முற்றிலும் அகங்காரமற்றவர்கள் ஆகவேண்டும். தந்தை எவ்வளவு அகங்காரமற்றவர் எனப் பாருங்கள்! சில குழந்தைகள் மற்றவர்களிடமிருந்து தனிப்பட்ட சேவையை ஏற்றுக்கொள்கின்றனர். தந்தை முற்றிலும் அகங்காரமற்றவர்! அவர் ஒருபோதும் எவருடனும் கோபப்படுவதில்லை. குழந்தைகள் கீழ்ப்படிவற்றவர்களாக இருந்தால், தந்தையால் அவர்களுக்கு விளங்கப்படுத்த முடியும்: நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? எல்லையற்ற தந்தை மாத்திரமே அனைத்தையும் அறிவார். குழந்தைகள் அனைவரும் ஒரேயளவிற்குத் தகுதி வாய்ந்தவர்களாக இருப்பதில்லை. இன்னமும் தகுதியற்றவர்கள் இருக்கவே செய்கின்றனர். பாபா தொடர்ந்தும் உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். பல குழந்தைகள் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கை அதிகரித்து, நூறாயிரக் கணக்கானோர் இருப்பார்கள். தந்தை தொடர்ந்தும் உங்களை எச்சரிக்கின்றார்: குழந்தைகளே, தவறுகள் செய்யாதீர்கள்! நீங்கள் தூய்மையற்றவர்களில் இருந்து தூய்மையானவர்கள் ஆகுவதற்கே இங்கு வந்துள்ளீர்கள். எனவே, தூய்மையற்ற செயல்களைச் செய்யாதீர்கள்! எவரது பெயரிலோ, ரூபத்திலோ சிக்கிக்கொள்ளாதீர்கள். சரீர உணர்வுடையவர்கள் ஆகாதீர்கள்! ஆத்ம உணர்வுடையவர்களாக இருந்து தொடர்ந்தும் தந்தையை நினைவுசெய்யுங்கள்! தொடர்ந்தும் ஸ்ரீமத்தைப் பின்பற்றுங்கள்! மாயை மிகவும் சக்திசாலி. பாபாவினால் அனைத்தையும் விளங்கப்படுத்த முடியும். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்பிற்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தந்தை தாயாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

**தாரணைக்கான சாராம்சம்:**

1. தந்தையைப் போன்று அகங்காரமற்றவர் ஆகுங்கள். எவரிடமிருந்தும் தனிப்பட்ட சேவையை ஏற்றுக்கொள்ளாதீர்கள்! எவருக்கும் துன்பம் விளைவிக்காதீர்கள்! தண்டனை அனுபவிக்கக்கூடியதாக பாவச் செயல்கள் எதனையும் செய்யாதீர்கள். பாலும் சீனியும் போன்று சேர்ந்து வாழுங்கள்.
2. உங்கள் சொந்த மனத்தின் கட்டளைகளையன்றி, ஒரேயொரு தந்தையின் ஸ்ரீமத்தையே பின்பற்றுங்கள்.

**ஆசீர்வாதம்:** சகல பொக்கிஷங்களும் நிறைந்தவர்களாகி, உங்கள் முகத்தினூடாகச் சேவை செய்கின்ற உண்மையான சேவையாளர் ஆகுவீர்களாக.

சகல பொக்கிஷங்களாலும் சதா நிரம்பி வழிகின்ற குழந்தைகளின் கண்களிலும் அவர்களின் நெற்றியிலும் இறைபோதை தென்படுகிறது. அவர்களின் முகங்களும் சேவை செய்கின்றன. அவர்கள் குறைந்தளவு சேகரித்துள்ளாரா அல்லது கூடியளவு சேகரித்துள்ளாரா என்பது அவர்களின் முகத்தில் தென்படுகிறது. ஒரு மேன்மையான குலத்திற்குரிய மக்களின் முகங்களில் அது தென்படுகிறது. அத்துடன் அவர்களது போதையின் பிரகாசமும் புலப்படுகின்றது. அதேபோன்று உங்கள் முகமும், உங்கள் எண்ணங்களும் ஒவ்வொரு எண்ணத்தையும், ஒவ்வொரு செயலையும் தெளிவாக்கட்டும். அப்பொழுதே நீங்கள் உண்மையான சேவகர் என அழைக்கப்படுவீர்கள்.

**சுலோகம்:** உங்கள் பொக்கிஷங்களாகிய நேரத்தையும் எண்ணங்களையும் சேமித்து, அதன்மூலம் உங்கள் சேமிப்புக் கணக்கை அதிகரியுங்கள்.

*****ஓம் சாந்தி*****